**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு), திருவில்லிபுத்தூர்.**
**முன்னிலை :– திரு. T.V.மணி, B.A., LL.B.,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் திங்கள்கிழமை

OS.No.7/2025

T.கணேசன் ... வாதி

–எதிர்–

K.மாரியப்பன் ...பிரதிவாதி

இந்த வழக்கானது என் முன்பாக 17.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.கண்ணன், திரு.R.கணேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.லட்சுமிநாராயணன் அவர்கள் முன்னிலையாகியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதுமான காலஅவகாசம் அளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும், நீதிமன்றத்தில் கடந்த 25.11.2025 அன்று அழைத்த போது எவ்வித எடுத்துரைப்பும் இல்லாமையால் ஒருதரப்பாக்கப்பட்ட நிலையில் வாதி தரப்பு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், வாதி தரப்பும் கேட்கப்பட்டும், இன்று இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

பிரதிவாதி ரூ.22,13,400/–ம் அதில் அசல் தொகை ரூ.18,00,000/–க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை ஒப்பந்தப்படி ரூ.1/– வீதம் வட்டியும், தீர்ப்பு தேதி முதல் வசூல் தேதி வரை நீதிமன்ற தாரணைப்படி பின்வட்டியும் பிரதிவாதியிடமிருந்து வாதிக்கு கிடைக்க உத்தரவிடக்கோரியும் வழக்கின் செலவுத் தொகையை வாதிக்கு பிரதிவாதி செலுத்த கோரியும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

––––––

2) **பிராது சுருக்கம்**

வாதியும், பிரதிவாதியும் நீண்ட நாள் நண்பர்கள் ஆவார்கள். வாதி வெற்றி கம்ப்யூட்டர் சென்டர் என்ற பெயரில் ஆன்லைன் சேவைகள் செய்யும் தொழில் செய்து வருவதுடன் மாந்தோப்புகள் மற்றும் தென்னந்தோப்புகள் குத்தகைக்கு எடுத்தும் பாடுபட்டு வருகிறார். பிரதிவாதி நகை செய்து கொடுக்கும் ஆசாரியாக தொழில் செய்து வருகிறார். வாதியும், பிரதிவாதியும் நீண்ட நாள் நண்பர்கள் என்பதின் அடிப்படையில் பிரதிவாதி 2023 ம் ஆண்டு ஜனவரி கடைசி

வாரத்தில் வாதியை நேரில் அணுகி தனது அவசர நிமித்தம் குடும்பச் செலவுக்காகவும், கடன்களை தீர்க்கவும் ரூ.18,00,000/– கடனாகக் கொடுத்து உதவும்படி கேட்டுள்ளார். வாதி, பிரதிவாதியிடம் மாந்தோப்பு, தென்னந்தோப்பு குத்தகைக்காகவும், அதற்கான செலவுகளை ஈடுகட்டவும் மட்டுமே தன்னிடம் பணம் இருக்கிறது என்றும், அது தன்னுடைய அவசர சூழ்நிலைக்கு தேவைப்படுகிறது என்றும் பிரதிவாதியிடம் கூறியள்ளார். அதற்கு பிரதிவாதி மேற்படி கடன் தொகை ரூ.18,00,000/– த்தை வாதி கேட்கும் சமயத்திலோ அல்லது வாதிக்கு தேவைப்படும் சமயத்திலோ எந்தவித தாமதமுமின்றி கொடுத்துவிடுவதாகவும், மேற்படி கடன் தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/– க்கு வட்டி ரூ.1/– வீதம் சேர்த்து கூடிய வட்டியையும், அசலையும் வாதியிடம் செலுத்திவிடுவதாகவும், அதற்கு ஆதரவாக பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுப்பதாகவும் பிரதிவாதி, வாதியிடம் உறுதி அளித்துள்ளார். வாதி, பிரதிவாதியின் நம்பிக்கை வார்த்தைகளை நம்பியும், தான் கேட்கும் சமயத்தில் கொடுத்துவிடுவதாக பிரதிவாதி உறுதிகூறிய உறுதியுரைகளை நம்பியும் வாதி தனது வீட்டில் மாந்தோப்பு மற்றும் தென்னந்தோப்பு குத்தகை எடுத்ததின் மூலம் கிடைத்த வருவாய்களில் வாதி ரொக்கமாக வீட்டில் வைத்திருந்ததால் மேற்படி வருவாய்களிலிருந்து ரொக்கமா ரூ.18,00,000/–த்தை நண்பர் என்ற முறையிலும், பிரதிவாதி நம்பிக்கை வார்த்தைகளை நம்பியும் பிரதிவாதி கொடுத்து உதவுவதற்கு மனம் இரங்கி உள்ளார். அதனடிப்படையில் வாதி, பிரதிவாதியிடம் 03.02.2023 ம் தேதியில் தன்னுடைய வீட்டிற்கு வந்து கடன் தொகை ரூ.18,00,000/– த்தை பெற்றுக் கொள்ளுமாறு பிரதிவாதியிடம் கூறியுள்ளார். அதனடிப்படையில் பிரதிவாதி 03.02.2023 ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் வாதியின் வீட்டிற்கு வந்து வாதியிடம் 03.02.2023 ம் தேதியில் ரூ.18,00,000/– ரொக்கம் கடனாகப் பெற்றுக் கொண்டுள்ளார். பிரதிவாதி, வாதியின் வீட்டிற்கு வரும் போதே 03.02.2023 ம் தேதியிட்டு பிராமிசரி நோட்டை நிரப்பி அவரது கையொப்பம் மட்டும் இடாமல் கொண்டு வந்திருந்தார். அந்த சமயத்தில் மகாலிங்கம் என்பவரின் மகன் கணேசன் என்பவரும், சித்தன் என்பவரின் மகன் செந்தில்குமரேசன் என்பவரும் வாதியின் வீட்டில் இருந்துள்ளனர். பிரதிவாதி,வாதிக்கு முன்பாகவும், வாதியின் வீட்டிலிருந்த கணேசன் என்பவர் முன்பாகவும், சித்தன் என்பவரின் மகன் செந்தில்குமரேசன் என்பவர் முன்பாகவும் தாவா பிராமிசரி நொட்டில் கையொப்பம் இட்டார். அதன் பின்னர் வாதியின் வீட்டிலிருந்த மகாலிங்கம் என்பவரின் மகன் கணேசன் என்பவரும், சித்தன் என்பவரின் மகன் செந்தில்குமரேசன் என்பவரும் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க தாவா பிராமிசரி நோட்டில் சாட்சிகளாகக் கையொப்பமிட்டனர். அதன்பின்னர் மேற்படி பிராமிசரி நோட்டினை வாதியிடம் ஒப்படைத்து விட்டு பிரதிவாதி ஏற்கனவே வாதியிடம் கூறிய உறுதியுரையின்படி, பிராமிசரி நோட்டில் கண்டுள்ளபடியும், வாதிக்கு தேவைப்படும் சமயத்திலோ அல்லது வாதிக்கு கேட்கும் சமயத்திலோ கடன் தொகை ரூ.18,00,000/– த்தை மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு ரூ.1/–

வட்டி வீதம் வட்டி சேர்த்து கூடிய வட்டியையும், அசலையும் செலுத்திவிடுவதாக மீண்டும் வாதியிடம் சாட்சிகள் முன்னிலையில் பிரதிவாதி உறுதியளித்துள்ளார். பிரதிவாதி, வாதியிடம் வாங்கிய தாவா புரோநோட்டுக்கடனுக்கு அசலுக்காகவோ, வட்டிக்காகவோ நாளது தேதிவரையில் எந்தவித தொகையும் செலுத்தவில்லை. வாதி ஷை புரோநோட்டுக் கடன் தொகையின் அசலையும், வட்டியையும் திருப்பிச் செலுத்துமாறும், தனக்கு மாந்தோப்பு மற்றும் தென்னந்தோப்பு குத்தகை எடுப்பதற்கும் மற்றும் அதற்கான செலவுகளுக்கும் பணம் தேவைப்படுகிறது என்றும் பிரதிவாதியிடம் பலமுறை நேரிலும் தனது வகையாட்கள் மூலமும் கேட்டு வந்ததில் பிரதிவாதி ஷை புரோநோட்டின் அசல் மற்றும் வட்டியை செலுத்தாமல் செலுத்தி விடுவதாகக் கூறி வீண் காலதாமதம் செய்து வந்துள்ளார். பிரதிவாதி மேற்படி புரோநோட்டுப்படி வாதிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை வட்டியுடன் திருப்பிச் செலுத்த சட்டப்படி கடமைப்பட்டவராவார். எனவே வேறுவழியின்றி வாதி, பிரதிவாதியிடமிருந்து தனக்கு வரப்பெற வேண்டிய தாவா புரோநோட்டிற்குரிய கடன் அசல் தொகை ரூ.18,00,000/- த்தையும், அதற்குரிய வட்டியையும் வசூல் செய்வதற்கு தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

3) வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

1) வாதிக்கு எதிர்வாதி 03.02.2023 அன்று கடனுறுதி பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளாரா?

2) வாதி கோரிய படி பிரதிவாதி தொகைசெலுத்த கடமைப்பட்டவரா?

3) வாதிக்கு வழக்கில் கோரிய படி பரிகாரம் கிடைக்கக்கூடியதா?

4) வாதிக்கு கிடைக்க கூடிய வேறு பரிகாரம் என்ன?

4) வாதி தரப்பில் வாதியே வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் முலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் திரு.கணேசன் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.7 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5) பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.லட்சுமிநாராயணன் அவர்கள் முன்னிலையாகியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதுமான காலஅவகாசம் அளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும், நீதிமன்றத்தில் கடந்த 25.11.2025 அன்று அழைத்த போது எவ்வித எடுத்துரைப்பும் இல்லாமையால் ஒருதரப்பாக்கப்பட்டு வாதி தரப்பு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

6) வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

7) தீர்வு – <u>எழுவினாக்கள் 1 முதல் 4</u>

வாதி தன் தரப்பை நிரூபிக்க வாதி தரப்பில் வாதியே வா.சா.1 விசாரிக்கப்பட்டு அவர் தனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளார். அதில் தானும், பிரதிவாதியும் நீண்ட நாள் நண்பர்கள் ஆவார்கள் என்றும் தான்வெற்றி கம்ப்யூட்டர் சென்டர் என்ற பெயரில் ஆன்லைன் சேவைகள் செய்யும் தொழில் செய்து வருவதுடன் மாந்தோப்புகள் மற்றும் தென்னந்தோப்புகள் குத்தகைக்கு எடுத்தும் பாடுபட்டு வருகிறார் என்றும் பிரதிவாதி நகை செய்து கொடுக்கும் ஆசாரியாக தொழில் செய்து வருகிறார் என்றும் தானும், பிரதிவாதியும் நீண்ட நாள் நண்பர்கள் என்பதின் அடிப்படையில் பிரதிவாதி 2023 ம் ஆண்டு ஜனவரி கடைசி வாரத்தில் தன்னை நேரில் அணுகி தனது அவசர நிமித்தம் குடும்பச் செலவுக்காகவும், கடன்களை தீர்க்கவும் ரூ.18,00,000/– கடனாகக் கொடுத்து உதவும்படி கேட்டுள்ளார் என்றும் தான் பிரதிவாதியிடம் மாந்தோப்பு, தென்னந்தோப்பு குத்தகைக்காகவும், அதற்கான செலவுகளை ஈடுகட்டவும் மட்டுமே தன்னிடம் பணம் இருக்கிறது என்றும், அது தன்னுடைய அவசர சூழ்நிலைக்கு தேவைப்படுகிறது என்றும் பிரதிவாதியிடம் கூறியதாகவும் அதற்கு பிரதிவாதி மேற்படி கடன் தொகை ரூ.18,00,000/–யை தான் கேட்கும் சமயத்திலோ அல்லது தனக்கு தேவைப்படும் சமயத்திலோ எந்தவித தாமதமுமின்றி கொடுத்துவிடுவதாகவும், மேற்படி கடன் தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு வட்டி ரூ.1/– வீதம் சேர்த்து கூடிய வட்டியையும், அசலையும் தன்னிடம் செலுத்திவிடுவதாகவும், அதற்கு ஆதரவாக பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுப்பதாகவும் பிரதிவாதி, தன்னிடம் உறுதி அளித்ததாகவும் தான், பிரதிவாதியின் நம்பிக்கை வார்த்தைகளை நம்பியும், தான் கேட்கும் சமயத்தில் கொடுத்துவிடுவதாக பிரதிவாதி உறுதிகூறிய உறுதியுரைகளை நம்பியும் தனது வீட்டில் மாந்தோப்பு மற்றும் தென்னந்தோப்பு குத்தகை எடுத்ததின் மூலம் கிடைத்த வருவாய்களில் தான் ரொக்கமாக வீட்டில் வைத்திருந்ததால் மேற்படி வருவாய்களிலிருந்து ரொக்கமா ரூ.18,00,000/–த்தை நண்பர் என்ற முறையிலும், பிரதிவாதி நம்பிக்கை வார்த்தைகளை நம்பியும் பிரதிவாதி கொடுத்து உதவுவதற்கு மனம் இரங்கி உள்ளார் என்றும் அதனடிப்படையில் தான், பிரதிவாதியிடம் 03.02.2023 ம் தேதியில் தன்னுடைய வீட்டிற்கு வந்து கடன் தொகை ரூ.18,00,000/– த்தை பெற்றுக் கொள்ளுமாறு பிரதிவாதியிடம் கூறியுள்ளார் என்றும் அதனடிப்படையில் பிரதிவாதி 03.02.2023 ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் வாதியின் வீட்டிற்கு வந்து தன்னிடம் 03.02.2023 ம் தேதியில் ரூ.18,00,000/– ரொக்கம் கடனாகப் பெற்றுக் கொண்டுள்ளார் என்றும் பிரதிவாதி, தான் வீட்டிற்கு வரும் போதே 03.02.2023 ம் தேதியிட்டு பிராமிசரி நோட்டை நிரப்பி அவரது கையொப்பம் மட்டும் இடாமல் கொண்டு வந்திருந்தார் என்றும் அந்த சமயத்தில் மகாலிங்கம் என்பவரின் மகன் கணேசன் என்பவரும், சித்தன் என்பவரின் மகன் செந்தில்குமரேசன் என்பவரும் தன் வீட்டில் இருந்துள்ளனர் என்றும் பிரதிவாதி,வாதிக்கு முன்பாகவும், தன் வீட்டிலிருந்த கணேசன்

என்பவர் முன்பாகவும், சித்தன் என்பவரின் மகன் செந்தில்குமரேசன் என்பவர் முன்பாகவும் தாவா பிராமிசரி நொட்டில் கையொப்பம் இட்டார் என்றும் அதன் பின்னர் தன் வீட்டிலிருந்த மகாலிங்கம் என்பவரின் மகன் கணேசன் என்பவரும், சித்தன் என்பவரின் மகன் செந்தில்குமரேசன் என்பவரும் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க தாவா பிராமிசரி நோட்டில் சாட்சிகளாகக் கையொப்பமிட்டனர் என்றும் அதன்பின்னர் மேற்படி பிராமிசரி நோட்டினை தன்னிடம் ஒப்படைத்து விட்டு பிரதிவாதி ஏற்கனவே தன்னிடம் கூறிய உறுதியுரையின்படி, பிராமிசரி நோட்டில் கண்டுள்ளபடியும், தனக்கு தேவைப்படும் சமயத்திலோ அல்லது தனக்கு கேட்கும் சமயத்திலோ கடன் தொகை ரூ.18,00,000/- த்தை மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1/- வட்டி வீதம் வட்டி சேர்த்து கூடிய வட்டியையும், அசலையும் செலுத்திவிடுவதாக மீண்டும் தன்னிடம் சாட்சிகள் முன்னிலையில் பிரதிவாதி உறுதியளித்துள்ளார் என்றும் பிரதிவாதி, தன்னிடம் வாங்கிய தாவா புரோநோட்டுக்கடனுக்கு அசலுக்காகவோ, வட்டிக்காகவோ நாளது தேதிவரையில் எந்தவித தொகையும் செலுத்தவில்லை என்றும் தான் ஷை புரோநோட்டுக் கடன் தொகையின் அசலையும், வட்டியையும் திருப்பிச் செலுத்துமாறும், தனக்கு மாந்தோப்பு மற்றும் தென்னந்தோப்பு குத்தகை எடுப்பதற்கும் மற்றும் அதற்கான செலவுகளுக்கும் பணம் தேவைப்படுகிறது என்றும் பிரதிவாதியிடம் பலமுறை நேரிலும் தனது வகையாட்கள் மூலமும் கேட்டு வந்ததில் பிரதிவாதி ஷை புரோநோட்டின் அசல் மற்றும் வட்டியை செலுத்தாமல் செலுத்தி விடுவதாகக் கூறி வீண் காலதாமதம் செய்து வந்துள்ளார் என்றும் பிரதிவாதி மேற்படி புரோநோட்டுப்படி தனக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை வட்டியுடன் திருப்பிச் செலுத்த சட்டப்படி கடமைப்பட்டவராவார் என்றும் எனவே வேறுவழியின்றி தான் பிரதிவாதியிடமிருந்து தனக்கு வரப்பெற வேண்டிய தாவா புரோநோட்டிற்குரிய கடன் அசல் தொகை ரூ.18,00,000/- த்தையும், அதற்குரிய வட்டியையும் வசூல் செய்வதற்கு தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளார்.

8) மேலும் வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1 மூலமாக 03.02.2023 ம் தேதியிட்ட ரூ.18 லட்சத்திற்கு வாதி பெயருக்கு எதிர்வாதி எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 13.09.2000 ம் தேதியிட்ட இராஜபாளையம் சார்பதிவக ஆவணம் எண்.3093/2000 ம் தேதிய கிரைய பத்திரத்தின் சார்பதிவக நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 01.01.2000 முதல் 29.12.2024 வரையிலான வில்லங்க சான்றிதழ்கள் 3 எண்ணம் கணினி நகல் வா.சா.ஆ.3 வரிசை ஆகவும், 08.05.2021 ம் தேதியிட்ட எதிர்வாதியின் தகப்பனாரும், தாயாரும் காலமாகிவிட்டார்கள் என்பதை காட்டக்கூடிய வாரிசு சான்று ஆன்லைன் நகல் வா.சா.ஆ.4 ஆகவும் ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் வாதி தரப்பில் வா.சா.ஆ.1 ல் கையொப்பம் செய்த கணேசன் என்பவர் வா.சா.2 சாட்சி விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக வா.சா.2 ன் ஆதார் அட்டையின் உண்மை நகல் வா.சா.ஆ.5 ஆகவும், 03.02.2023 ம் தேதிய வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி

கையொப்பம் வா.சா.ஆ.6 ஆகவும், வில்லங்க சான்று கணினி நகல் வா.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.லட்சுமிநாராயணன் அவர்கள் முன்னிலையாகியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதுமான காலஅவகாசம் அளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும், நீதிமன்றத்தில் கடந்த 25.11.2025 அன்று அழைத்த போது எவ்வித எடுத்துரைப்பும் இல்லாமையால் ஒருதரப்பாக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் மூலமாகவும் வாதியின் வழக்கை எதிர்வாதி ஒப்புக்கொள்வதாகவும் வாதியின் வழக்கிற்கு எவ்வித ஆட்சேபணை இல்லை என்பதாலும் வாதி கோரிய பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கது என்று எழுவினாகள் 1 முதல் 4 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

முடிவில், வாதியின் வழக்கை தீர்ப்பாணை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. வாதிக்கு, எதிர்வாதியானவர் பிராது மொத்த தொகையான ரூ.22,13,400/–யையும் அதில் அசல் தொகை ரூ.18,00,000/–க்கு பிராது தாக்கல் செய்த காலம் முதல் தீர்ப்பாணை தேதி முடிய 9% வட்டியும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை முழுவதும் செலுத்தும் காலம் வரை 6% பின்வட்டியும், வழக்கின் செலவுத் தொகையையும் தீர்ப்பு தேதியிலிருந்து 3 மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 1ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T V MANI
Digitally signed by T V MANI
Date: 2026.06.01 16:00:36 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>

வா.சா.1 – திரு.கணேசன் (வாதி)
வா.சா.2 – திரு.கணேசன்

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

வா.சா.ஆ.1 – 03.02.2023ம் தேதியிட்ட ரூ.18 லட்சத்திற்கு வாதி பெயருக்கு எதிர்வாதி எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட் அசல்

வா.சா.ஆ.2 – 13.09.2000ம் தேதியிட்ட இராஜபாளையம் சார்பதிவக ஆவணம் எண்.3093/2000ம் தேதிய கிரைய பத்திரத்தின் சார்பதிவக நகல்

வா.சா.ஆ.3 வரிசை – 01.01.2000 முதல் 29.12.2024 வரையிலான வில்லங்க சான்றிதழ்கள் 3 எண்ணம் கணினி நகல்

வா.சா.ஆ.4 – 08.05.2021ம் தேதியிட்ட எதிர்வாதியின் தகப்பனாரும், தாயாரும் காலமாகிவிட்டார்கள் என்பதை காட்டக்கூடிய வாரிசு சான்று ஆன்லைன் நகல்

வா.சா.ஆ.5 – வா.சா.2 ன் ஆதார் அட்டையின் உண்மை நகல்
வா.சா.ஆ.6 – 03.02.2023 ம் தேதிய வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம்
வா.சா.ஆ.7 – வில்லங்க சான்று கணினி நகல்

T V MANI Digitally signed by T V MANI
Date: 2026.06.01 16:00:43 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்.
ஸ்ரீவில்லிபுத்தூர்.
OS.No.7/2025
தீர்ப்புரை நாள் – 01.06.2026

**OS. NO.7/2025, Date : 01.06.2026**

Judgment is pronounced.

As a result, the suit is decreed with cost. And the Defendant is directed to pay a sum of Rs.22,13,400/- and out of it Rs.18,00,000/- the defendant is directed to pay an interest at the rate of 9% from the date of plaint till the date of decree and at the rate of 6% subsequent interest from the date of decree till the date of realization. Time for payment is 3 months from today.

Additional District Judge,
Srivilliputhur.